Australian Government

BE COVIDSAFE

# COVID-19-இற்கான வாய்-வழி சிகிச்சைகள்

மே 2023

## COVID-19 க்கான வாய்வழி சிகிச்சைகள் என்ன?

COVID-19 இருப்பது சோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள தகுதிபெறுபவர்கள் வாய்-வழியாக உட்கொள்வதற்கான மாத்திரைகள் அல்லது 'கேப்சூல்'கள் ஆகியன COVID-19-இற்கான வாய்-வழி சிகிச்சைகளாகும். சிகிச்சைக்காக, மருத்துவமனையில் ஒரு உள்-நோயராக அனுமதிக்கப்படுவதற்காகப் பயணம் செய்யவேண்டிய தேவை இல்லாமல் பலராலும் வீட்டில் இருந்தவாறே சிகிச்சையைப் பெற இயலும் என்பது இந்த மருந்துகளினால் கிடைக்கும் அனுகூலமாகும்.

## வாய்-வழி சிகிச்சைகளை எப்படி மற்றும் எவ்வாறு பெறவேண்டும்?

நோயறிகுறிகள் தோன்றிய 5 நாட்களுக்குள் அல்லது COVID-19 இருப்பது உறுதிப்படுத்தப்பட்ட பிறகு கூடிய விரைவில், 5 நாட்கள் வரை 12 மணி நேரத்திற்கு ஒரு முறை மாத்திரைகளாக, அல்லது 'கேப்சூல்'களாக இந்த மருந்துகள் எடுத்துக்கொள்ளப்படும்.

## வாய்-வழி சிகிச்சைகளுக்கான தகுதியை யார் பெறுவர்?

**18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள்**

உங்களுக்கு COVID-19 இருப்பது உறுதிப்படுத்தப்பட்டு 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருந்தால், நீங்கள் வைரஸ்-எதிர்ப்பிற்கான வாய்-வழி சிகிச்சைகளுக்கு நீங்கள் தகுதிபெறக் கூடும்.

- நடுத்தரமான, அல்லது தீவிரமான நோயெதிர்ப்புத்-திறன் குறைபாடு (கீழே பட்டியலிடப்பட்டுள்ளது) அல்லது
- ஏற்கனவே COVID-19 நோயினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தீர்கள், மேலும் நீங்கள் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளீர்கள்.

<u>நடுத்தரமான, அல்லது தீவிரமான நோயெதிர்ப்புத்-திறன் பாதிப்பு நிலைகளில் பின் வருவன உள்ளடங்கும்:</u>

- இரத்தப் புற்று நோய் அல்லது சில இரத்த சிவப்பணுக் கோளாறுகள் (தாலஸீமியா, சிக்கிள்-செல் நோய்)

- மாற்று உறுப்பு பெற்றவர்
- ஆரம்ப-நிலை நோயெதிர்ப்புத்-திறன் குறைபாடு (HIV) உள்ளவர், அல்லது நோயெதிர்ப்புத்-திறன் குறைபாட்டு (immunodeficiency (HIV)) தொற்று ஏற்பட்டுள்ளவர்
- கடந்த 3 மாதங்களில் 'கெமோதெரபி' அல்லது முழு சரீர 'ரேடியோதெரபி' ஆகிய சிகிச்சைகள்
- கடந்த 3 மாதங்களில் அதியளவிலான 'கோர்ட்டிகோ-ஸ்டீரோய்டுகள்' அல்லது 'பல்ஸ் கோர்ட்டிகோ-ஸ்டீரோய்டு' சிகிச்சை
- கடந்த 3 மாதங்களில் நோயெதிர்ப்புத்-திறனை முடக்கக் கூடிய சிகிச்சைகள்
- கடந்த 12 மாதங்களில் 'ரைடக்ஸிமாப்' (rituximab) சிகிச்சை
- 'செரிப்ரல் பால்ஸி' (cerebral palsy) அல்லது 'டௌன் சிண்ட்ரம்' (down syndrome)
- பிறப்பிலிருந்து இருக்கும் இதய நோய்
- ஒன்றிற்கு மேற்பட்ட உடல்-நலப் பிரச்சினைகள் மற்றும்/அல்லது நலிவு ஆகியவற்றுடன் கூடிய இயலாமையுடன் வசித்தல்.

## வயதில் மூத்தவர்கள் மற்றும் 'ஆபொரிஜினி'ப் பூர்வ குடியினர் மற்றும் 'டோரிஸ்' நீரிணைத் தீவக மக்கள்

நீங்கள் வயதில் மூத்தவராகவோ, 'ஆபொரிஜினி'ப் பூர்வ குடியினர் அல்லது 'டோரிஸ்' நீரிணைத் தீவகத்தவராகவோ இருந்தால், அத்துடன் உங்களுக்கு COVID-19 இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால், பின் வருவன உங்களுக்குப் பொருந்தும் தருணங்களில் வாய்-வழி சிகிச்சைகளைப் பெற நீங்கள் தகுதி பெறக்கூடும்:

- உங்களுக்குள்ள ஆபத்துக் கூறுகள் எதுவாக இருந்தாலும், உங்களுக்கு நோயறிகுறிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நீங்கள் 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர் என்றால்
- நீங்கள் (கீழே சொல்லப்பட்டுள்ள) கூடுதல் ஆபத்துக் கூறுகள் உள்ள 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுள்ளவர் என்றால்
- நீங்கள் (கீழே சொல்லப்பட்டுள்ள) **1** ஆபத்துக் கூறு உள்ள 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய 'ஆபொரிஜினி'ப் பூர்வ குடியினர், அல்லது 'டோரிஸ்' நீரிணைத் தீவகத்தவர் என்றால்.

<u>ஆபத்துக் கூறுகள்:</u>

- முதியோர் பராமரிப்பு இல்லத்தில் வசித்தல்
- ஒன்றிற்கு மேற்பட்ட நோய்-நிலைகளோடு கூடிய இயலாமையுடன் வசித்தல் (ஆதரவுதவிகள் அளிக்கப்படும் தங்குமிடத்தில் வசிப்பது மட்டுமின்றி)
- பக்கவாதம் (stroke) அல்லது மறதிக்கோளாறு மற்றும் மூளை நரம்பு-இழை நோய்-நிலைகள், உதாரணமாக, 'மல்டிப்பிள் ஸ்க்லொரேசிஸ்', 'கிலெய்ன் பார் சின்ட்ரம்'

- நீராத நுரையீரல்-சுவாசத்-தடை நோய்' (chronic obstructive pulmonary disease (COPD)) மற்றும் நடுத்தரமான அல்லது தீவிரமான ஆஸ்த்துமா ஆகியவற்றை உள்ளடக்கிய தீராத சுவாச நோய்-நிலைகள்
- உடற்பருமன் அல்லது சர்க்கரை நோய் (மருந்துகள் தேவைப்படும் 'வகை I' அல்லது 'II')
- மாரடைப்பு, இயத இரத்த-நாள நோய், 'கார்டியோமையோபதி' (cardiomyopathy) எனப்படும் இதய இயக்கக் கோளாறுகள்
- சிறுநீரகச் செயலிழப்பு அல்லது 'ஸிர்ரோஸிஸ்' (cirrhosis) எனப்படும் ஈரல் சேதம்
- அதியுயர்-நிலை மருத்துவப் பராமரிப்பு குறைவாகக் கிடைக்கும் தொலைதூரப் பகுதிகளில் வசித்தல்.

இந்த மருந்துகள் அனைவருக்கும் பொருத்தமானவை அல்ல, எனவே உங்களுடைய தகு-நிலையைச் சோதித்துத் தெரிந்துகொள்ள உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள்.

## வாய்-வழி சிகிச்சையை நான் எப்படி, மற்றும் எங்கிருந்து பெறலாம்?

COVID-19 வாய்-வழி மருந்துகளை வாங்குவதற்கு மருத்துவரால் தரப்படும் மருந்துச்-சீட்டு ஒன்று உங்களுக்குத் தேவைப்படும். மருந்துச்-சீட்டு ஒன்றைக் கொண்டு மருந்துக்கடைகளில் நீங்கள் இவற்றை வாங்கலாம்.

## வாய்-வழியாக உட்கொள்ளப்படும் மருந்துகளுக்குத் தள்ளுபடி உண்டா?

மருந்துச்-சீட்டுகள் கொடுப்பதற்கான அதிகாரம் உள்ள ஒருவரால், உதாரணத்திற்கு மருத்துவர் ஒருவரால், தரப்பட்ட மருந்துச்-சீட்டைக் கொண்டு 'மருந்து ஆதாயத் திட்டம்' (Pharmaceutical Benefits Scheme) (PBS) - இன் மூலமாக தள்ளுபடி அளிக்கப்பட்ட வாய்-வழியாக உட்கொள்ளப்படும் மருந்துகளைத் தகுதி உள்ளவர்கள் பெறலாம்.

COVID-19 இருப்பது உறுதிப்படுத்தப்படுபவர்கள், ஆனால் 'மெடிகெயர் அட்டை' இல்லாதவர்கள் அவர்களுக்குள்ள சிகிச்சைக்கான தெரிவுகளைப் பற்றிய அறிவுரைக்காக 'பொது மருத்துவ சுவாச சிகிச்சையகம்' (GP respiratory clinic) ஒன்றுடன் தொடர்புகொள்ளலாம்.

## வாய்-வழி சிகிச்சைகளை யார் மேற்கொள்ளக்கூடாது?

கர்ப்பமாக இருக்கும், அல்லது தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கும் பெண்களில் வாய்-வழி சிகிச்சைகள் சிபாரிசு செய்யப்படுவதில்லை - கர்ப்பமாக இருக்கும், அல்லது தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கும் பெண்கள்

COVID-19 -இற்கு எதிரான தடுப்பூசியை இட்டுக்கொள்ள வேண்டியது அதி முக்கியம் என்பதை இது குறிக்கும்.

சில மருந்துகளைக் குறிப்பிட்ட வேறு சில மருந்துகளோடு சேர்த்து உட்கொள்வது பாதுகாப்பானது அல்ல, மற்றும் தீவிர சிறுநீரக நோய் மற்றும் ஈரல் நோய் உள்ளவர்களில் இவற்றைப் பயன்படுத்தக்கூடாது.

## வாய்-வழி சிகிச்சைகளும் இன-விருத்தித் திறனும்

COVID-19-இற்காக வாய்-வழியாக உட்கொள்ளப்படும் மருந்து ஒன்று உங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டால், கருத்தடைக்கான மருந்துகள் குறித்து நீங்கள் கூடுதல் கவனமாக இருக்கவேண்டும், ஏனெனில், கருத்தடை மருந்துகள் வேலை செய்யும் விதத்தை இந்த சிகிச்சை பாதிக்கக்கூடும். வெவ்வேறு கருத்தடை மருந்துகளைப் பற்றியும், உங்களுக்கு மிகவும் ஏற்றது எது என்பதைப் பற்றியுமான கேள்விகள் உங்களுக்கு இருந்தால் உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள்.

## தடுப்பூசியேற்றமும் வாய்-வழி சிகிச்சைகளும்

COVID-19-இற்கு எதிராய்த் தடுப்பூசி இட்டுக்கொள்வதற்கு ஒரு மாற்றாக இந்த மருந்துகளைப் பயன்படுத்தலாம் என்பது இவற்றின் நோக்கமல்ல.

COVID-19-இல் இருந்து உங்களையும், உங்களுடைய அன்பிற்குரியவர்களையும், பரந்துபட்ட சமூகத்தினரையும் பாதுகாத்துக்கொள்வதற்கான மிகச் சிறந்த வழி தடுப்பூசி இட்டுக்கொள்வதாகும்.

## அங்கீகாரம்

பயன்பாட்டிற்காக, ஆஸ்திரேலியாவில் அனைத்து மருந்துகளும் Therapeutic Goods Administration (TGA) அமைப்பினரால் கட்டாயமாக அங்கீகரிக்கப்பட்டாக வேண்டும். TGA எனும் அமைப்பினர், அனைத்துத் தடுப்பூசிகள், மருந்துகள் மற்றும் இதர மருத்துவ உற்பத்திப்பொருட்கள் ஆகியவற்றை ஒழுங்குறுத்தி, ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படுவதற்காக அவற்றிற்கு அங்கீகாரம் அளிக்கும் விஞ்ஞானிகளும் மருத்துவ வல்லுநர்களுமாவர். ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படுவதற்காக மருந்துகளை அனுமதிப்பதற்கான கண்டிப்பான தர-நிலைகளை TGA கொண்டுள்ளது. பாதுகாப்பான மற்றும் செயலூக்கம் மிக்க மருந்துகளுக்கு மட்டுமே அவர்கள் அங்கீகாரம் அளிப்பர். COVID-19 -இற்கான வாய்-வழி மருந்துகளும் இதில் அடங்கும்.

## மேலதிகத் தகவல்கள்

COVID-19-ஐப் பற்றிய தகவல்களுக்கும், உங்களுடைய மொழியில் கிடைக்கும் ஆதரவுதவிகளுக்கும் 1800 020 080-இல் National Coronavirus Helpline-ஐ

அழையுங்கள், மற்றும் மொழிபெயர்த்துரைப்பு உதவிக்கு ‘தெரிவு 8’-ஐ மேற்கொள்ளுங்கள்.